
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1155

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

தமிழ்.கா.அமுதரசன்

50

கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!

ஓவியம் : ரவி பேலட்

# அண்ணா அமைத்த அடித்தளம்!



### தமிழ் புறக்கணிப்பு

*1786-ஆம் ஆண்டு, மொழியியல் அறிஞர் சர் வில்லியம் ஜோன்ஸ், இந்திய - ஐரோப்பிய மொழிகளின் உறவு குறித்து குறிப்பாக, சமஸ்கிருதம், அவெஸ்தான், கிரேக்கம் மற்றும் லத்தீன் ஆகிய மொழிகளுக்கிடையிலான ஒற்றுமையைச் சுட்டிக்காட்டினார். அதன் பின்னர், ஐரோப்பிய மற்றும் அமெரிக்க மொழியியலாளர்கள் இந்திய மொழிகளில் மிகுந்த ஆர்வம் காட்டத் தொடங்கினர்.*

*இந்திய மொழிகள் குறித்த ஆராய்ச்சி என்றால், அவர்களுக்கு 'சமஸ்கிருதம்' என்ற ஒன்றுதான் தெரிந்தது. இந்தத் தவறான அடித்தளம் காரணமாகவே 'சமஸ்கிருதம்' தொடர்பான ஆராய்ச்சித் துறைகள் மேற்கத்திய நாடுகளில் நிறுவப்படுவதற்கு வழிவகுத்தது. தமிழ் அல்லது திராவிட மொழிகள் குறித்த ஆராய்ச்சி அவர்களால் புறக்கணிக்கப்பட்டது. இது அவர்கள் தவறல்ல, இந்திய மொழிகளில் நிபுணரான, புகழ்பெற்ற பிரெஞ்சுப் பேராசிரியர் ஃபீலிஸோட் கருத்துப் படி, இந்தப் புறக்கணிப்பிற்கு, இரண்டு காரணங்கள் இருந்தன.*

*முதல் காரணம், 18-ஆம் நூற்றாண்டு முதல் ஐரோப்பியர்களின் செயல்பாடுகள் கொல்கத்தாவில் மட்டுமே குவிந்திருந்தன. இதன் காரணமாக, அவர்களுக்கு தமிழ் நாட்டைப் பற்றிய உணர்வு இருக்கவில்லை.*

*இரண்டாவது காரணம், வெளிநாட்டு மொழியியலாளர்கள், தமிழ் மொழியானது இந்தி, பெங்காலி, பஞ்சாபி மற்றும் மராத்தி போன்ற பிராந்திய மொழிகளில் ஒன்று மட்டுமே என்று தவறாகக் கருதினார்கள்' என அதில் குறிப்பிட்டுள்ளார் அண்ணா.*

*1974-ஆம் ஆண்டில், 'செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம்' என ஒன்றை உருவாக்கி, அதன் முதல் இயக்குநராக 'மொழிஞாயிறு' தேவநேயப் பாவாணர் அவர்களை நியமித்தார் அன்றைய முதலமைச்சர் கலைஞர். அதற்கு முன்னர், செம்மொழி கோரிக்கை வலுப்பெறுவதற்கு, பேறறிஞர் அண்ணாவின் பங்கு குறிப்பிடத்தக்கது.*

*1966-ஆம் ஆண்டில், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்கள் எழுதிய 'உலகின் முதன்மை உயர்தனிச் செம்மொழி (The Primary Classical Language of the World)' என ஆங்கிலத்தில் எழுதிய நூல், தமிழ் செம்மொழி என்பதற்கான அசைக்க முடியாத ஆதாரமாக இருந்தது. அந்த நூல் குறித்து, பேறறிஞர் அண்ணா பாராட்டி எழுதியதுடன், உலகப் பல்கலைக்கழகங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற முயற்சியையும் ஊக்குவித்தார்.*

*குறிப்பாக, ஆரிய - திராவிட போராட்டத்தின் நீட்சியாகவே, தமிழை உலக அரங்கிற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கிற நோக்கத்துடன், 1968-ஆம் ஆண்டில், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, சென்னையில் நடத்த வைத்தார். பேறறிஞர் அண்ணாவின் அந்த நோக்கம் குறித்து அறிந்துகொள்ள வேண்டுமெனில், 1968-ஆம் ஆண்டு ஜனவரியில், 'காஞ்சி' இதழ் பொங்கல் மலரில் அவர் எழுதிய விரிவான உரையிலிருந்து புரிந்துகொள்ளலாம்.*

### ஜெர்மன் - சமஸ்கிருத உறவு

*தமிழின் தொன்மை இருட்டடிப்பு செய்யப்பட்டதற்குப் பின்னால், ஆரியத்தின் சூழ்ச்சியும் உள்ளது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், கிழக்கிந்திய கம்பெனியின் ஆட்சிக்காலத்தில், இங்கு நிலவிய மொழி, பண்பாடு, கலை ஆகியவற்றை கவனிப்பதற்காக ஆசியாட்டிக் சொசைட்டி (Asiatic society) ஒன்றை நிறுவினர். முதலில், சென்னை மாகாணத்தில் அமைக்கப்பட்ட இந்த அமைப்பினை, ஆட்சி விரிவாக்கத்தின் காரணமாக அன்றைய தலைநகரமாக இருந்த கொல்கத்தாவிற்குக் கொண்டு சென்றனர். சமஸ்கிருதம் முதன்மை பெற்றதற்கு இதுவும் ஒரு காரணமாக இருந்தது. வடநாட்டு மொழிகள் அனைத்திற்கும் சமஸ்கிருதம் தாய் போல விளங்கியதால், அனைத்து மொழிகளுக்கும் சமஸ்கிருதமே அடிப்படை என்கிற உணர்வுக்கு ஐரோப்பிய மொழியாளர்கள் வந்தனர். ஏனென்றால், அப்போது அவர்கள் ஆசியாட்டிக் சொசைட்டியுடன் மட்டுமே தொடர்பு கொள்ளும் நிலை இருந்தது. அவர்களில் அதிக ஆர்வம் கொண்டிருந்தவர்கள் ஜெர்மன் நாட்டு மொழி அறிஞர்கள் என்கிறார் மணவை முஸ்தபா. அதற்குக் காரணம், ஜெர்மானியர்கள் தங்களை ஆரியர்களாகக் கருதிக்கொண்டதுதான்.*

> **தமிழ் நூல்கள் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்வதில் இருந்த தேக்கம், 1968-இல் அண்ணா எடுத்த முயற்சியின் மூலம் தகர்க்கப்பட்டது.**

*ஆரியர்களின் ஒரே வேத மொழி சமஸ்கிருதம் என்பது, ஜெர்மானியர்களை சமஸ்கிருதம் மீது அளவு கடந்த பாசம் வைக்கத் தூண்டியது. சமஸ்கிருதம் கற்க ஏராளமான ஜெர்மானியர்களும் வந்துள்ளனர். சமஸ்கிருத மொழியில் இருந்த படைப்புகளை ஜெர்மனியில் மொழிபெயர்க்கத் தொடங்கியுள்ளனர்.*

*ஜெர்மானிய அறிஞர் மாக்ஸ் முல்லர், சமஸ்கிருதம் கற்று, ஏராளமான வேத நூல்களை மொழிபெயர்த்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. அப்படி ஜெர்மன் மொழியில் சென்ற நூல்கள், பின்னர் ஜெர்மனியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்யப்பட்டு ஐரோப்பாவில் பரவியது. பின்னர், உலகின் கவனத்தைப் பெற்றது. ஆங்கில ஆட்சியாளர்களுக்கு நெருக்கமாக இருந்த சமஸ்கிருத அறிஞர்களால், சமஸ்கிருதத்தைச் செம்மொழியாக அங்கீகரிக்கச் செய்வதில் எளிதாக வெற்றி பெற்றனர்.*

### மொழிமாற்றத் தடைகள்

*அதே காலகட்டத்தில், தமிழின் தொன்மையை உலகறியச் செய்வதில், சமஸ்கிருதத்திற்குக் கிடைத்த வாய்ப்புகள் போல தமிழுக்கு அமையவில்லை என்பதால், ஒரு தேக்கம் இருந்தது. அப்படியான காலகட்டத்தில்தான், சமயப் பணியாற்ற வந்த கால்டுவெல், வீரமாமுனிவர் எனப் பெயர் மாற்றிக்கொண்ட ஜோசப் பெஸ்கி போன்றோர், தமிழின் பெருமைகளை உலகின் கவனத்துக்குக் கொண்டுசென்றனர்.*

*அந்த நெடிய ஆரிய - திராவிட போராட்டத்தில்தான், தமிழைச் செம்மொழியாக உலகம் ஏற்க வேண்டுமெனில், நமது பெருமையை நமது மொழியறிஞர்கள் விளக்குவது மட்டுமே போதாது, உலக மொழியறிஞர்களின் வலுவான ஏற்பு வேண்டும் என விரும்பிய தமிழறிஞர்கள், 1964-ஆம் ஆண்டு, புதுடெல்லியில் நடந்த கீழ்த்திசை மொழியாளர்கள் மாநாட்டில், 'அனைத்துலகத் தமிழ் மொழி ஆராய்ச்சிக் கழகம்' என்கிற அமைப்பை உருவாக்கினார்கள். அதில் முக்கியமான பொறுப்பை மேற்கத்திய ஆராய்ச்சியாளர்களே ஏற்றனர். அதன்மூலம் உலக அளவில் தமிழ் மாநாடு நடத்த வேண்டும் என, முதன்முதலில் 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், மலேசியப் பல்கலைக்கழகம், மலேசிய தேசிய கல்வி வளர்ச்சிக்கழகம் ஆகிய அமைப்புகளின் ஒத்துழைப்புடன் முதல் உலகத் தமிழ் மாநாட்டின் கருத்தரங்கம் மலேசியாவில் நடத்தப்பட்டது.*

*25 நாடுகளில் இருந்து 200-க்கும் மேற்பட்ட அறிஞர்கள், மேற்கே அமெரிக்காவில் இருந்து கிழக்கே ஜப்பான் வரையிலான நாடுகளில் இருந்து வந்து கலந்துகொண்டனர். 'The Primary Classical Language of the World' என ஆங்கில நூல்வழி அப்போதுதான் கவனம் பெறவைத்தார் பாவாணர்.*

*அதையடுத்து 1968-ஆம் ஆண்டு, பேறறிஞர் அண்ணா தலைமையில் கழக ஆட்சி அமைந்ததும், தமிழ்நாடு அரசின் சார்பிலும் முதலமைச்சர் அண்ணாவின் சார்பிலும் இந்த சர்வதேச அமைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையும் கருத்தரங்கினையும் தமிழ்நாட்டில் நடத்த ஏற்பாடு செய்தார். தமிழ் ஆராய்ச்சி மற்றும் உலக நாடுகளில் தமிழ் விரிவாக்கம் குறித்து இந்த மாநாட்டில் விரிவாகப் பேசப்பட்டது. தமிழ்நாட்டின் மாநில விழா போல நடைபெற்ற இந்த மாநாட்டின்போது, தமிழின் தொன்மையான ஏராளமான நூல்கள் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்பட்டன. அதுவரையில் தமிழ் நூல்கள் ஆங்கிலத்தில் மொழிமாற்றம் செய்வதில் இருந்த தேக்கம், 1968-இல் அண்ணா எடுத்த முயற்சியின் மூலம் தகர்க்கப்பட்டது.*

...தொடரும்

## மக்களின் நம்பிக்கையைப் பெற்ற தலைவர்!

'தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் எத்தனையோ வாக்குறுதிகள் இருந்தாலும் கதாநாயகனாக உயர்ந்து நிற்பது எது தெரியுமா? மகளிருக்கான 8,000 ரூபாய் கூப்பன் திட்டம். இதில்தான் ஸ்டாலினுடைய புத்திசாலித்தனம் தெரிகிறது. இது மற்ற எல்லா வாக்குறுதிகளையும் புல்டோசர் போல அடித்து நிரவிக்கொண்டு போகிற வாக்குறுதி' என முகநூலில் கருத்துப் பகிர்ந்துள்ளார் பத்திரிகையாளர் சே.இளங்கோவன்.

"அரிசி அட்டை, சர்க்கரை அட்டை என்று பாகுபாடு காட்டாமல், வருமான வரி செலுத்தாத அனைத்து மகளிருக்கும் கூப்பன் என்பது புத்திசாலித்தனம். 8,000 ரூபாயைப் பணமாகக் கொடுத்தால், அதைக் கணவன்மார்கள் பிடுங்கிக்கொண்டு போய் டாஸ்மாக்கில்தானே கொடுக்கப்போகிறார்கள் என எதிர்க்கட்சிகள் எகத்தாளமிடும். சங்கிநாதமும் காதுகிழிக்கும். கூப்பனை என்ன செய்ய முடியும்? அது டாஸ்மாக்கில் கண்டிப்பாகச் செல்லுபடியாகாது.

பொருளாகக் கொடுத்தாலும் ஏராளமாக கமிஷன் பெற்றுக்கொண்டு, தரமற்ற பொருள்களைக் கொடுக்கிறார்கள் என்றுதான் எதிர்க்கட்சிகள் கூக்குரலிடும். கூடவே, ஏற்கனவே நம் வீட்டிலிருக்கும் பொருளையே அரசு கொடுத்துவிட்டதே என அதைச் சில பொதுமக்கள் வந்த விலைக்கு வெளியில் விற்கவும் செய்வார்கள்.

இந்தக் கூப்பன் திட்டத்தில் எந்தக் குற்றச்சாட்டும் எழ வாய்ப்பில்லை. பக்கத்திலுள்ள கடைகளுக்கு இந்தக் கூப்பனைக் கொண்டுபோய்க் கொடுத்து, மிக்ஸி, கிரைண்டர், வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், மைக்ரோவேவ் அவன், மின்சார அடுப்புகள், டி.வி. என அவரவருக்குத் தேவையான எதை வேண்டுமானாலும், எந்த பிராண்டில் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளலாம். பொருளைத் தேர்ந்தெடுக்கும் எல்லாப் பொறுப்பும் பொதுமக்களுடைய கைகளுக்கே வந்துவிடுவதால், ஒரு ரூபாய் ஊழலுக்கும் வழியில்லை. இதுதான் ஸ்டாலினுடைய அதிபுத்திசாலித்தனம்.

ஆக மொத்தத்தில், மகளிருக்கான இந்தக் கூப்பன் திட்டம், ஸ்டாலின் மீதான நம்பிக்கையை - கனவுதான் என்றாலும்கூட, முடிந்தவரை அவர் ஊழலற்ற ஆட்சி செய்யவே விரும்புகிறார் என்பதை பொதுமக்கள் மத்தியில் உறுதிப்படுத்துகிறது என்றுதான் சொல்ல வேண்டும். முடிவு? மே 4-இல்தான் உறுதிப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



எம்.ஏ.ரகீம்

### புத்தாடையுடன் இளைஞர் அணி அமைப்பாளர் தளபதி!



1980-ஆம் ஆண்டு, இளைஞர் அணி தொடக்க காலகட்டத்தில், அன்றைய இளைஞர் அணி அமைப்பாளர்களில் ஒருவராகத் திகழ்ந்த, இன்றைய முதலமைச்சர் அவர்களை கோபாலபுரம் இல்லத்தில், அவரது பிறந்த நாளுக்கு மறுநாள், நீலகிரி மாவட்டத்தில் இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த இப்போது இன்றைய உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினராக இருக்கும் பா.மு.முபாரக், காலஞ்சென்ற மரப்பாலம் செரீஃப் ஆகியோருடன் சென்று சந்தித்தபோது எடுத்த படம். தளபதி அவர்களை நீலகிரிக்குச் சுற்றுப்பயணம் அழைப்பதற்காக வந்திருந்தோம். எங்களைப் புத்தாடையுடன் வரவேற்றது, மறக்க முடியாத நிகழ்ச்சி.

– எம்.ஏ.ரகீம்,
17-வது வார்டு கிளைக் கழகச் செயலாளர்,
குன்னூர் நகரம், நீலகிரி மாவட்டம்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### உதயசூரியன் - எழுஞாயிறு போற்றுதும்!

1957-ஆம் ஆண்டு, கழகம் முதன்முதலில் தேர்தலைச் சந்தித்தபோது, உதயசூரியன் சின்னம் குறித்து, பேறறிஞர் அண்ணா ஒரு நிகழ்ச்சியில் குறிப்பிட்டார். "உதயசூரியன் - எழுஞாயிறு, நமக்கு சின்னமாகத் தரப்பட வேண்டும் என்று நாம் கேட்டிருந்தோம். இந்த சின்னமே கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே, இளங்கோவடிகள் கூறியதுபோல, 'ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!' என்று கூறி, எழுஞாயிறு வெற்றி பெறத்தக்க வகையில், தோழர்கள் பாடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்" என்று முழங்கினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900